# தமிழ்நாடு அரசு –நீர்வள நிலவளத் திட்டம்
## (TN IAMWARM)

### நோக்கம்

- மீன்வளர்ப்பினை நீர்ப்பாசன அமைப்புடன் ஒருங்கிணைத்து நீரின் உற்பத்தி திறனை அதிகரித்தல்.
- தனிநபர் மீன் உணவு தேவையினை பூர்த்தி செய்ய உள்நாட்டு மீன் உற்பத்தியினை பெருக்குதல்.
- விவசாயிகளுக்கு மீன்வளர்ப்பின் மூலம் கூடுதல் வருவாய் ஈட்ட வாய்ப்பினை உருவாக்குதல்.
- மீன்வளர்ப்பிற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்.
- மீன் வளர்ப்பில் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல்.
- உபநதி கேட்டங்களில் மீன்விற்பனை நிலையங்கள் அமைத்தல்
- மீன் பிடித்திறனை அதிகரிக்க தேவையான மீன்பிடி உபகரணங்களை வழங்குதல்.
- விவாசயிகளுக்கு மீன்வளர்ப்பில் பயிற்சி அளித்தல்.

### திட்ட விபரங்கள்

1. பண்ணைக்குட்டைகளில் மீன்வளர்ப்பு
2. மீன்வளர்ப்புடன் நன்னீர் இறால் வளர்ப்பினை ஒருங்கிணைத்தல்
3. மீன் விதைப்பண்ணைகள் அமைத்தல்
4. கூண்டுகளில் மீன்குஞ்சு வளர்த்தல்
5. வண்ண மீன்வளர்ப்பு
6. மீன்பிடி சாதனங்கள் வழங்குதல்
7. மீன் விற்பனை நிலையங்கள் அமைத்தல்

### பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்த்தல்

- 1000 சமீ பரப்பளவுள்ள பண்ணைக் குட்டையிலிருந்து 600 கிலோ மீன் உற்பத்தி மூலம் கூடுதல் வருவாய் ஈட்டிடலாம்.
- மீன்வளர்ப்புடன் நன்னீர் இறால் வளர்ப்பினை ஒருங்கிணைத்து கூடுதல் வருவாய் பெற்றிடலாம்.
- மீன்கள் வளர்த்திடும் அதே நீரை வேளாண்மைக்கும் பயன்படுத்திடலாம்.
- மீன் வளர்ப்பிற்கான உள்ளீட்டுச் செலவினம் முழுவதும் முதல் ஆண்டிற்கு மான்யமாக வழங்கப்படும்.

### மீன் விதைப்பண்ணைகள் அமைத்தல்

- உபநதிக் கோட்டத்தில் உள்ள அனைத்து நீர் நிலைகளின் மீன்குஞ்சு தேவையினை பூர்த்தி செய்யலாம்.

- *நீர் உபயோகிப்பாளர் சங்கம் மீன் விதைப் பண்ணைகள்அமைத்து வருவாய் ஈட்டலாம்.*
- *600 சமீ பரப்பில் ஆண்டொன்றிற்கு 3.0 லட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி திறன்கொண்ட மீன் பண்ணை கட்டமைப்பு வசதிகளை உருவாக்க தேவைப்படும். மூலதனம் மற்றும் முதலாமாண்டு உள்ளீட்டு செலவினம் முழுவதும் மான்யமான வழங்கப்படும்.*

**கூடுகளில் மீன்குஞ்சுகள் வளர்த்தல்**

- *நீர்நிலைகளில் கூடுகள் அமைத்து தேவையான மீன் குஞ்சுகளை வளர்த்திடலாம்.*
- *60000 வளர்ந்த மீன்குஞ்சுகள் வளர்த்தெடுக்க தேவையான மிதவைக் கூடுகளின் செலவினத்தில் 90 விழுக்காடு மற்றும் முதலாமாண்டிற்கான உள்ளீட்டு செலவினம் முழுவதும் மான்யமாக வழங்கப்படும்.*

**வண்ண மீன் வளர்ப்பு**

- *உபநதிகோட்ட பகுதிகளில் வண்ணமீன் வளர்ப்பு பண்ணைகள் அமைத்து கூடுதல் வருவாய் ஈட்டிடலாம்*
  *500 ச.மீ. நிலத்தில் வண்ணமீன் வளர்ப்பு உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி ஆண்டொன்றிற்கு 50000 வண்ணமீன் உற்பத்தி செய்திடலாம்*

- *வண்ணமீன் வளர்ப்பு உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க ஆகுர் மூலதனத்தில் 90 விழுக்காடு மற்றும் முதலாண்டிற்கான உள்ளீட்டு செலவினர் முழுவதுர் மான்யமாக வழங்கப்படும்*

**மீன்பிடி உபகரணங்கள் வழங்குதல்**

- *உபநதிகோட்ட நீர்நிலைகளில் மீன்பிடிதிறனை அதிகரித்திட உள்நாட்டு மீனவர் கூட்டுறவுசங்க உறுப்பினர்களுக்கு மீன்பிடி சாதனங்கள் வழங்குதல்.*
- *கண்ணாடி நாரிழை பரிசல்கள் மற்றும் வலைகள் 90 விழுக்காடு மான்யத்தில் வழங்குதல்.*

**மீன் வளர்ப்பு தொழில்நுட்ப பயிற்சி**

- *உபநதிகோட்ட பகுதியில் உள்ள விவசாயிகள் மற்றும் ஆர்வலர்களுக்கு கலப்பின் மீன்வளர்ப்பு, பண்ணை குட்டைகளில் மீன் வளர்ப்பு, கூடுகளில் மீன்குஞ்சுகள் வளர்த்தல், மீன் விதைப்பண்ணை மேலாண்மை, வண்ண மீன்வளர்ப்பு ஆகியவற்றில் பயிற்சி அளித்தல்.*
- *திட்டபயனாளிகளுக்கு சிறப்பு பயிற்சி அளித்தல்.*
- *பயனாளிகளை அருகாமையில் உள்ள மீன் பண்ணைகளுக்கு அழைத்துச்சென்று விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.*
- *பயிற்சிகள் அனைத்தும் இலவசமாக அளிக்கப்படும்.*

**மீன் விற்பனை நிலையம்**

- உபநதிகோட்ட பகுதியில் மீன் உணவு தேவையினை பூர்த்தி செய்தல்
- நுகர்வோருக்கு தரம்வாய்ந்த மீன் உணவினை குறைந்த விலையில் கிடைக்கச் செய்தல்
- உறைபதன பெட்டியுடன் கூடிய மீன் விற்பனை நிலையம் அமைக்க ஆகுர் மூலதனத்தில் 75 விழுக்காடு நீர் உபயோகிப்பாளர் சங்கத்திற்கு மான்யமாக வழங்கப்படும்.

**தகவல் மற்றும் கூடுதல் விபரங்களுக்கு**

மீன்துறை சிறப்பு ஆணையர் அலுவலகம்

டி.எம்.எஸ் வளாகம். தேனாம்பேட்டை,

சென்னை - 600 006.
தொலைபேசி எண் 044-24320199 / 24336311

**********